# *DIGITAL MAGAZINE- 2022*

*@*

https://www.rmpcsipskrmcollegeofeducation.org/

**PART - II**

**R.M.P.C.S.I.P.S.K. RAJARATNAM**

**MEORIAL COLLEGE OF EDUCATION**

**SATHANKULAM – 628704,**

**THOOTHUKUDI (Dt), TAMILNADU.**

**04639-266616, 267617.**

**Email Id**: rmpcsipskrmcedn@yahoo.co.in

Parvathi .K

I Year

Pedagogy of Biological Science

1260820BD056

கோகுலத்தில் கண்ணன்



. Benoline Chandra B

I Year

Pedagogy of Mathematics

12608BD016

# 10 Daily Habits Tips: That will change your life

1. Get up early in the morning.
2. Pray to God.
3. Do regular exercise.
4. Eat healthy foods.
5. Develop your reading habits.
6. Love the work you do.
7. Focus on one thing you do.
8. Don't spend your time on unnecessary things.
9. Take dinner before 8 p.m.
10. Sleep early.


Grace Jency D

I Year

Pedagogy of English

1260820BD030

## Save World



Rubina.P

I Year

Pedagogy of English

1260820BD066

**Beauty of loneliness**



பா.ஜெமிமா எபனேசர்

முதலாம் ஆண்டு

ஆங்கிலத்துறை

1260820BD037

**பார்**

திருந்திய உள்ளங்களை திருந்தா

கண்களுடன் பார்ப்பதே இவ்வுலகம்!

**பாரம்**

வாழ்க்கை என்னும் துலாத்தட்டில்

பாரங்கள் என்பது நம்மை

வீழ்த்துவதற்கு அல்ல; நம்மை

உயர்த்துவதற்கு மட்டுமே!

**நீதி**

அன்று திருத்தியப் பக்கங்களே

இன்று திருந்தாப் பக்கங்களுக்கு

காரணம்…


Blessy R

I Year

Pedagogy of English

1260820BD017

# A Girl with Teddy



Mercy Emymal S

I Year

Pedagogy of Tamil

1260820BD047

**Little Child**



Ragel Pettila.A

I Year

Pedagogy of English

1260820BD061

# LIFE

Life is a closed book,
Unlock it with eager,
You should make it as a storybook,
So choose your ambition boldly.

Life is a journey with people,
Where someone, appears like a bright star
And leaves soon, saying goodbye,
Which lead you, towards new experiences.

Life is unpredictable and unimaginable,
What life brings to you next, is unidentifiable,
So move purposefully every second,
And spend some time to know yourself.

Life is to discover your worth,
Do you know why you were born?
You were born for a reason, so
Don’t give up until you find reason.

தே.சாம் கிருபாகரன்

முதலாம் ஆண்டு

பொருளறிவியல் துறை

1260820BD069

## கல்வியின் பயனே!

இன்றைய வாழ்வில் கல்வி என்பது அறிவை வளர்க்கவும், அப்படி அறிவு வளர்ந்துவிட்டதாக கொடுக்கப்படும் சான்றிதழ் சார்ந்து மட்டுமே உள்ளது. ஆனால் இதுதான் உண்மையான கல்வியா என்றால் இல்லை. தமிழரான நாம் சங்கம் வைத்து மொழியையும், கலையையும் வளாத்தவர்கள். காலமறிதல் மற்றும் கல்விக்காக தனி அதிகாரமே தந்துள்ளார் பொய்யாமொழி புலவன் வள்ளுவன். நாம் வாழும் இக்காலத்தில் ஏதாவது கவனக் குறைவாகவோ, தெரியாமலோ தவறு செய்தால் **படித்த பிள்ளை தானே நீ?** என வினவுகின்றனர் மூத்தவர்கள். நம்முடைய பதில் என்னவாக இருக்கும் **ஆமா, இதெல்லாம் பள்ளிக்கூடத்துல சொல்லியா தராங்க?** என்பதே. ஆம், இதிலிருந்தே படித்தவர்களிடம் சமுதாயம் எதிர்பார்ப்பது வெறும் அறிவை மட்டுமல்ல என்பது தெளிவு.

அப்படியெனில் ஒரு தரமான கல்வியின் உண்மையான விளைவுதான் என்ன?

**“நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, இறைவனாகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார்’’** என நல்ல வார்த்தைகள் பேசும் நாவும், நல்லவை கேட்கும் செவியும் உடையவர்கள் கற்றவர்கள் என்கிறது திருவிவிலியம்.

**‘‘கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**

**மாடல்ல மற்றை யவை’’**

அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே மற்றைய பொன் பொருள் மண் என்னும் செல்வங்கள் ஒருவனுக்குச் சிறந்த செல்வம் ஆகாது என்கிறார் வள்ளுவனார்.

**“மக்கள் எந்த குலத்தில் பிறந்திருந்தாலும், எத்தகையவராக இருந்தாலும் அந்த குலத்தில் உயர்ந்த கல்வி கற்றவரையே முதன்மையாக உபசரித்து ‘வருக’ என வரவேற்பார்கள்”** என கற்றோர் பெருமையை பாடுகிறது நறுந்தொகை பாடல்.

**‘‘நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு**

**இன்னாது எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**

**ஒப்புறவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**

**நல்லினத் தாரோடு நட்டல்- இவையெட்டும்**

**சொல்லிய ஆசார வித்து"**

என நல்லொழுக்கத்தை விதைக்கும் எட்டு விதைகளில் ஒன்றாக கல்வியையும் சேர்த்துள்ளார் ஆசாரக்கோவையில் பெருவாயின் முள்ளியார்.

**"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**

**மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**

**தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்கு**

**சென்ற இடமெல்லாம் சிறப்பு"**

என கற்றவர் சிறப்பை கூறுகிறார் ஔவை மூதாட்டி.

**"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை**

**மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்**

**எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன**

**விச்சைமற்று அல்ல பிற"**

என்றும், கல்வியை களவாட முடியாததாய், கொடுத்தால் குறையாததாய், அரசராலும் கவர முடியாததாய், குழந்தைக்கு கொடுக்க வேண்டிய முக்கிய சொத்தாய் நாலடியாரில் குறிப்பிடுகிறார் சமண முனிவர் ஒருவர்.

**"ஏடன்று கல்வி சிலர் எழுதும் பேசும்**

**இயலன்று கல்வி பலர்க் கெட்டா தென்னும்**

**வீடன்று கல்வி ஒரு தேர்வு தந்த**

**விளைவன்று கல்வி அது வளர்ச்சி வாயில்"**

என வளர்ச்சியின் வாசலாக கல்வியை குறிப்பிடுகிறார் குலோத்துங்கன்.

**"பள்ளி தலமனைத்தும் கோயில் செய்குவோம்'**

**எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்''**

என பள்ளியைக் கோயிலாக்குகிறார் நம் பாரதி.

**"கற்றோர்க்கு கல்வி நலனே கலனல்லால்**

**மற்றோர் அணிகலம் வேண்டாவாம்''**

என கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும் என்கிறார் குமரகுருபரர்.

**"தொழில் நோக்கில் கல்வி பயிலுதல் வேண்டா அறிவு விளக்கத்தின் பொருட்டு கல்வி பயிலுதல் வேண்டும்''** என்கிறார் திரு.வி.க.

**"கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறையன்று. அது மெய்மை தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு நெறிமுறையாகும்''** என ஐ.நா. அவையின் முதல் பெண் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் கூறுகிறார்.

கல்வி மனிதன் வாழ்வதற்கான வழி மட்டுமன்று அது மனிதன் வாழ்வதற்கான வழிமுறை. ஆதனால்தான் தங்கள் இறை நம்பிக்கையை பரப்ப வந்த பிறநாட்டு போதகர்கள் கூட கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் போலும். நல்லொழுக்கமே நல்ல மனிதனை உருவாக்கும் கல்வியே நல்ல ஒழுக்கத்தை கற்பிக்கும். ஒரு மனிதனை, மனிதநேயமுள்ள மனிதனாக மாற்றுவதே கல்வியின் கடமை. புதிய செய்திகள் கற்பது மட்டுமல்ல, மனிதனின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் நற்பண்புகளைக் வெளிக்கொண்டு வருவதும், அவனது வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தி வாழ்கையை உயர்த்துவதும் கல்வியின் நோக்கமாகும்.

கல்வி என்பது அழியாத செல்வம், நல்லொழுக்கத்தின் வித்து, சென்ற இடமெல்லாம் சிறப்பு தருவது, குறையாத செல்வம், முத்தான சொத்து, வளர்ச்சியின் வாசல், அறிவின் விளக்கம், ஆன்மாவின் பயிற்சி. இந்த கல்வியின் உண்மையான பலனை அறிந்து, கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் போதே சமூகம் நேர்த்தியாக, ஒழுக்கமாக, இணக்கமாக, ஒற்றுமையானதாக மாறும்.

**"கல்வியின் பலனை அறிவோம்,**

**உலகில் மாற்றம் புரிவோம்''**

J.Jenitha

II Year

Pedagogy of English

1260819BD032

**Trip back in time**

Retrieve a split second,

Instead of, singing the blues.

As for the rueful hues,

Purchase the clock of diamond.

Pass-through many a moon;

Hunt for the gone boon,

Which, oblige yet to lament,

Every waking moment!

Arulbel Benela R

I Year

Pedagogy of Mathematics

1260820BD011

**The Fighter Cock**



பிளாரன்ஸ் அன்ட்ரோ வின்சிலின். ரெ

முதலாம் ஆண்டு

பொருளறிவியல் துறை

1260820BD026

# விரும்பிப்படி

இன்று நீ மணிக் கணக்காய் படிப்பது
  நாளை நீ மனிதனாய் வாழ்வதற்கு!
இன்று நீ கண் விழித்துப் படிப்பது
  நாளை நீ கண்ணீரின்றி வாழ்வதற்கு!!
இன்று நீ தலைகுனிந்து படிப்பது
  நாளை நீ தலை நிமிர்ந்து வாழ்வதற்கு!!!
இன்று நீ நம்பிக்கையுடன் படிப்பது
  நாளை நீ நலம் நிறைந்து வாழ்வதற்கு!!!!

Abitha Priya Dharshini. S

I Year

Pedagogy of Bioscience

1260820BD001

**Friendship**



Sibiyal Sona.S

I Year

Pedagogy of English

1260820BD075

**My Lovely Home**



கிறிஸ்டி ஞானபிரபா.பி

இரண்டாம் ஆண்டு

கணிதத்துறை

1260819BD014

**என் கவிதை**

**தொலைபேசி கல்லூரி**

கல்லூரியில் வேண்டாமென்ற அலைபேசியில் - இன்று
என் கல்லூரியே நடந்திட நான் மாணவியா? - இல்லை

நீங்களும் என் வீட்டில் உறுப்பினரா? – என்றே
குழம்பியிருக்கும் என் குடும்பம்!

இப்படிக்கு
மாணவி.

**தோழி**

என் சொந்தத்திலே சேராத இரத்தம் ஒன்று
என் உயிரிலே கலந்தது மாயமோ?
-இல்லை
என் இரத்தமே கசிந்து ஓடிய பின்னும்
என் உயிரினைக் காத்த அவள்(ன்) தான்
என் பந்தமோ?
என குழம்பியபடி அவள(ன)து தோழியாய் நான்.

**இயற்கை தமிழன்**

நம் புதுமையில்

பழமையை சேர்க்க

அரசியல் அறிவை ஊற்றி

நம்மில் இயற்கையை விளைச்சல் ஆக்கிடும் எம் தமிழன்.

**தாய் தந்தை**

புன்னகை புதைந்த வீரன் இவரில்

தன்

வீரத்தை புதைத்த புன்னகை இவள்!

**அம்பேத்கர்**

தீண்டாமையை அணைக்கத் துடித்து

சட்டத்தை தூண்டிவிட்ட தீபம்...!

**வாக்களிப்போம்**

நகத்திலே

சரியான மையினைத் தீட்டிவிட்டால்

புது ஓவியம் பிறக்கும் நாட்டிலே.

**தலைமுறை**

உடன் பிறப்புகளுக்கு பிறந்த

உடன்பிறவா தலைமுறை – என்

உதிரத்தில் கலந்த உறவுமுறை!

**காமராஜர்**

முதல்வர் என்ற அங்கியினுள் - யாம்

முதலாய் எளிமையின் தரிசனம்!

Muthu Ramalakshmi R

I Year

Pedagogy of Physical Science

1260820BD049

## Colours are the smiles of nature



Yuvalinga Priya .S

I Year

Pedagogy of Mathematics

1260820BD081

## தாய்மை



சு.யுவலிங்கப்பிரியா

முதலாம் ஆணடு

கணிதத்துறை

1260820BD081

# அறிவுப்பெட்டகம் புத்தகங்கள்

அறிவுப்பெட்டகம் புத்தகங்கள் ! என்றும் அழியா பலரின் எண்ணச்சிறப்பங்கள்!

அறிவினை, அறத்தினை, அன்பினை அகத்துள் அழுத்தமாய் பதியச்செய்து , அகமதி அழிக்கும்‘‘ **அன்பன்**’’ புத்தகங்கள்!

ஆளுமையை ஆழிபோல் நம்முள் ஆழமாக்கும் ஆன்மாவின்‘‘ **ஆசை நண்பன்** ’’புத்தகங்கள்!

இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் இன்பமளிக்கும் இளமை நீங்கா ‘‘**இளைஞன்** ’’புத்தகங்கள்!

ஈகைப்பண்பை ஈமவனம் வரையில் எடுத்துச் செல்லும் ‘‘**ஈடனவன்**’’புத்தகங்கள்!

உயரியப் பல உள்ளல்களை உருவாக்கி நம்முள் உண்மையை உயர்த்தும் ‘‘**உபாத்தியார்** ’’புத்தகங்கள்!

ஊக்கத்தினை ஊடுவெளியின்றி ஊர்வலமாய் நம்முள் உலாவச் செய்யும் ’’**ஊற்றுகோல்**’’ புத்தகங்கள் !

எளிமையைப் போதித்து , எழுச்சியுடன் எதிர்நீச்சல் போடச் செய்யும் ‘‘**எஜமான்** ’’புத்தகங்கள்!

ஏழ்கடலினைப் புரட்டி ஏத்தினும் கிட்டாத் தெளிவினை ஏகாந்தமாய் படிக்கும் ஓர் ஏட்டினால் ஏற்றும்‘‘ **ஏகாதிபதி** ’’புத்தகங்கள்!

ஐந்தவியின் கரத்தில் வீற்றிருந்து ஐம்புலனுக்கும் விருந்தளித்து ஐயமின்றி ஐயுலகும் ஆளச்செய்யும்‘‘ **ஐயனவன்** ’’புத்தகங்கள்!

ஒழுக்கமுடன் ஒட்பத்தினைக் கற்பித்து, ஒன்னார் அகற்றி , ஒற்றுமையை ஒளிரச் செய்யும்‘‘ **ஒளி** ’’புத்தகங்கள்!

ஓங்கிய எண்ணங்களை ஒடுக்கி ஓரிடத்தில் நில்லாமல் , ஓய்வின்றி ஓடச் செய்யும்‘‘ **ஓடம்**’’ புத்தகங்கள்!

ஔவியமின்றி , பொய்மை அகற்றி , அறிவினைப்பெருக்கி , அமுதமாய் வாழ வழிசெய்யும்‘‘**ஔடதம்**’’ புத்தகங்கள்!

புத்தகங்கள் ! பலரின் அகத்தினைத் திறக்கும் திறவுகோல்கள்!

புத்தகங்கள் ! அவை அறிவுப்பெட்டகங்கள்!

------ -------- ----------

Abitha Priya Dharshini S

I Year

Pedagogy of Biological Science

1260820BD001

## Once I saw a little bird!




Gomathi T

I Year

Pedagogy of Mathematics

1260820BD028

# Cute Kitty




Muthuselvi.T

I Year

Pedagogy of English

1260820BD050

# I like Fashion



ஹெலினா சிலுவை ஸ்டெபி.அ

முதலாம் ஆணடு

பொருளறிவியல்துறை

1260820BD032

## எது முன்னேற்றம்

பரபரப்பான காலை வேளை அது. வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்க ரமேஷ் தொடர்வண்டி நிலையத்தில் அலுவலகம் செல்ல தனது தொடர்வண்டியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.

இவ்வளவு மக்கள் கூட்டமான இடத்தின் பின்புறமிருந்து ஓர் அழுகுரல் அவனது காதில் விழுந்தது.

ஓசை வந்த திசை நோக்கி திரும்பிய போது ஒரு நான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன் கண்களில் நீர்மல்க கரங்களை நீட்டினான்.

ரமேஷ் கூட்டத்தில் வேரு யாரும் உன் கண்களுக்குத் தெரியவில்லையா? என்று முனங்கியவாரே தனது சட்டைப்பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

பணத்தைக் கொடுத்தது தான் தாமதம், யாரோ ஒருவர் எதிர்பாராமல் கையை சட்டென்று இறுக பிடித்துக் கொண்டார். திரும்பியபோது அவரது தோழர் வசந்த் அருகில் நின்று கொண்டிருந்தார்

ரமேஷ் இவர்களுக்கெல்லாம் பணத்தைத் செலவழிக்காதே, நாம நாயா பேயா கஷ்டப்பட்டு மேல் அதிகாரியிடமெல்லாம் திட்டு வாங்கி சம்பாதித்து ஒரு நல்ல இடத்துல இருப்போம். ஆனா இவர்கள் மாதிரி ஆளுங்கலெல்லாம் சின்ன வயசுலேயே கிளம்பிட்டாங்க. நல்லா மூக்கு பிடிக்க ஓட்டல்ல திண்ணுபுட்டு அப்புறம் அப்பாவியா யார் நல்லா கோட் சூட் போட்ருக்காங்கனு பாத்து அவங்க முன்னாடி நடிக்கிறது, நீ மட்டும் கேட்டுப்பாரு இந்த பையனிடம், உன்னை பள்ளிக்கூடத்துல சேர்க்கட்டான்னு …உடனே ஓடிருவான் என்று திட்டியவாரே பணம் கொடுப்பதை தடுத்தார்.

ரமேஷ் மனதில் சற்று மகிழ்வோடு அப்பாடா நிம்மதி என்றவாரே மீண்டும் காகித நோட்டை சட்டைப்பையில் வைத்தான்.

அவர்களது தொடர்வண்டியின் சத்தம் கேட்டு இருவரும் தொடர்வண்டியில் ஏறி அலுவலகம் சென்றனர்.

அன்று சம்பளநாள்; அலுவலக தலைவர் ஊழியர்களின் சம்பளத் தொகையை சிறு காகிதப்பையில் வைத்து அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது ரமேஷ் கையை நீட்டி பணத்தைப்பெறும் வேளையில் மனதுக்குள் காலையில் தொடர்வண்டி நிலையத்தில் பார்த்த சிறுவனின் ஞாபகம் சட்டென்று நினைவுக்கு வந்தது. விழித்த நிலையில் அலுவலக தலைவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு தனது நாற்காலியில் போய் அமர்ந்தார்.

…சீ" என்ன இது கேவலமான சிந்தனை அந்த சிறுவன் எங்க! நான் எங்க! எனக்கென்று தனியாக பெரிய வீடு உள்ளது. வங்கியில் சேமிப்பு உள்ளது. இது நான் கஷ்டப்பட்டு முன்னேறி எனது உழைப்பிற்கு கிடைத்த பணம். அவனோ பிறரிடம் பாசாங்கு காட்டி ஏமாற்றுகிறான் என்று தனது சிந்தனையை இகழ்ந்தவாறு வேலையைத் தொடர்கிறான். ".. அவனுக்கு நான் ஈடாக முடியுமா?.

சரியாக ஐந்து நாட்கள் கழித்து சனிக்கிழமையன்று தொடர்வண்டி நிலையத்தில் காலை பரபரப்புக்கு மத்தியில் மக்கள் எல்லாரும் ஏதோ ஒன்றை காட்சிப்பொருளாக பார்த்துவிட்டு போவதும் வருவதுமாய் இருந்தனர். ரமேஷும் என்ன அது என்று ஆவலோடு பார்க்க சென்றான்.

அப்போது தூணின் அருகில் முடங்கிய நிலையில் விழிப்பிதுங்கியவாறு எலும்பும் தோலுமாய் ஒரு சிறுவன் படுத்துக்கிடந்தான். "பாவம் யாருமில்லை போல பசிமயக்கத்தால் சாகும் நிலையில் கிடக்கிறான்" என்று அருகில் இருந்தவர்களின் சலசலப்புகள் காதில் ஒலித்தன.

ரமேஷ் அருகில் சென்று நின்று கொண்டிருந்தான். சிறுவனின் கையில் ஏதோ ஒரு துண்டு காகிதம் இருப்பது ரமேஷ்க்கு தென்பட்டது. இது அன்று தன்னிடம் காண்பிக்க வைத்திருந்த அந்த துண்டு காகிதம் என்பது நினைவுக்கு வந்தது காகிதத்தை சிறுவனின் கையிலிருந்து எடுத்து அதைப்பிரித்து பார்த்தான்.

அது ஒரு பள்ளிப் பாடப்புத்தகத்தின் கிழிந்த ஒரு பகுதி. அவனது அறியாமையை எண்ணி இன்று அவன் கண்களில் கண்ணீர் குளம் பொங்க நிற்கிறான்.

*******

Sathiya Bavani T

IYear

Pedagogy of English

1260820BD073

**அவனின்றி அணுவும் அசையாது**



Muthuselvi T

I Year

Pedagogy of English

1260820BD050

## Two Little Dickie Birds



ரா.ஆல்வின் லியோ

முதலாம் ஆண்டு

கணிதத்துறை

1260820BD003

# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்

நடந்து முடிந்த 2021 சட்டமன்ற தேர்தலில் 12(5.13%) பெண்கள் மட்டுமே சட்டமன்ற உறுப்பினராக தேர்வாக முடிந்திருக்கிறது. ஆனால் மொத்த வாக்காளர்களில் பெண் வாக்காளர்களே அதிகம் என தேர்தல் ஆணையம் சொல்லுகிறது. ஆண்களுக்கு நிகராக படிப்பிலும், வேலைவாய்ப்பிலும் ஏன் விண்வெளியில் கூட இடம்பிடித்து விட்ட பெண்கள் சட்டமன்றத்தில் தங்களுக்குரிய இடங்களை பிடிக்க இயலவில்லை. தேர்தல் நேரத்தில் பெண்களுக்கு நலத்திட்டங்களை அறிவித்தால் போதும் என அரசியல் கட்சிகள் எண்ணுகின்றன. இன்னும் கூட பெண்களுக்கு எது நன்மை, எது தேவை என்பதை ஆண் ஆட்சியாளர்களே முடிவு செய்கின்றனர்.

தேர்தல் அரசியலில் வெற்றி ஒன்றே இலக்காக அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. அத்தகைய கட்சிகள் வெற்றிக் கனியைத் தட்டிப் பறிக்கக் கூடிய வேட்பாளர்களை கண்டறிந்து நிறுத்த பிரயத்தனப்படும் போது அங்கு பெண் வேட்பாளர்கள் மிகக் குறைந்த அளவிலேயே களமிறக்கப்படுகின்றனர். இவ்வாறு வெற்றியை பெறக்கூடிய பெண் வேட்பாளர்கள் உருவாக்கப்படவில்லை என்பதே நிதர்சனமாகும்.

முதலில் ஒரு அரசியல் கட்சியின் கட்டமைப்பினைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒரு அரசியல் கட்சியானது தொண்டர்கள், கிளை செயலாளர்கள், ஒன்றிய செயலாளர், மாவட்ட செயலாளர், மாநில செயலாளர், தலைமை ஒருங்கிணைப்பாளர் என்று கட்டமைக்கப்பட்டுள்ளது. இதை தவிர ஒன்றிய மாவட்ட அளவில் பல்வேறு

பிரிவுகளில் நிர்வாகிகள் காணப்பட்டாலும், அவர்கள் ஒன்றிய செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளரின் அதிகாரத்திற்குட்பட்டே காணப்படுகின்றனர். இவர்களில் மாவட்ட செயலாளராக இருப்பவர்களுக்கு பெரும்பாலும் நமது சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுகிறது மற்றும் ஒன்றிய செயலாளராக பதவி வகிப்போரும் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால் இத்தகைய ஒன்றிய மற்றும் மாவட்ட செயலாளர் பொறுப்புகளில் பெண்கள் நியமிக்கப்படுவது இல்லை. அதற்கு பதிலாக பெண்கள் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராகவும், செய்தித் தொடர்பாளராகவும், மகளிர் அணி உறுப்பினராகவும், மகளிர் அணித் தலைவராகவும் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெண்களும் அரசியலில் பங்கு பெற வேண்டும் என்பதற்காக மகளிர் அணியை உருவாக்கினார். ஆனால் தற்போது மகளிர் அணி என்பது பத்தோடு பதினொன்றாவது அணியாகவே உள்ளது.

மாவட்ட செயலாளர் போன்ற பதவிகளை அடைய வேண்டும் எனில் அதற்கு அரசியலில் பல வருட அனுபவமும் கடின உழைப்பும் தேவை. ஆனால் அத்தகைய அனுபவம் பெறுவதில் பெண்களுக்கு பல தடைகள் காணப்படுகின்றன. வாக்குரிமைப் பெற்ற வயதிலிருந்தே பெண்கள் அரசியல் ஈடுபாட்டில் இருந்து விலக திருமணம் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. கருத்தியலோடு மோத இயலாதவர்கள் ஒழுக்க விதிகளின் அடிப்படையில் பெண்கள் மீது அவதூறுகளையும் மேலும் குற்றச்சாட்டுகளையும் அள்ளி வீசுகின்றனர். பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் இருப்பது போல அரசியலிலும் பாலியல் தொந்தரவுகள் அதிகம் காணப்படுகின்றன.

அரசியல் பதவியில் இருக்கும் பெண்கள் மீது பலவித ஆதிக்கங்கள் காணப்படுகின்றன. ஊராட்சிமன்றத் தலைவராக ஒரு பெண் உள்ளார் எனில் அவர் பெயருக்கு மட்டுமே தலைவராக உள்ளார். கணவரிடமோ அல்லது அவரது தந்தையிடமோ தான் அதிகாரம் முழுவதும் காணப்படுகிறது. மேலும் மாவட்டச் செயலாளராக உள்ள ஆண் ஒருவர் மாநில பொறுப்புக்கு முன்னேறுகிறார் எனில் அவர் பெண் ஒருவரை மாவட்டச் செயலாளராக நியமித்து அந்த பெண் மூலம் மாவட்டத்தில் தனது ஆதிக்கத்தை மறைமுகமாக நிலைநிறுத்துகிறார். முதல்வர் வேட்பாளராக ஒரு பெண்ணை

நிறுத்தி வாக்கு சேகரித்துவிட்டு, தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு வேறொருவரை முதல்வராக்கிய வரலாறும் கேரளாவில் உண்டு.

இத்தகைய நிலையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சியில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதை போன்று சட்டமன்றத் தேர்தலிலும் இட ஒதுக்கீடு வழங்கப்படுவதே பெண்கள் அதிகாரம் பெறுவதற்கான வழி என சிலர் கருதுகின்றனர். ஆனால் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி பதவிகளில் இருக்கும் பெண்கள் தன்னிச்சையான ஆளுமையாக உருவெடுக்காமல் அவர்களது தந்தை அல்லது கணவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டே காணப்படுகின்றார்கள். இதிலிருந்து நமக்கு ஒன்று புலப்படுகிறது அரசியலில் பெண்களுக்கு கொடுக்கப்படும் இட ஒதுக்கீடானது அவர்களை முழுமையாக அதிகாரப்படுத்தவில்லை. மறைமுகமாக ஆண்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே பயன்படுகிறது.

உண்மையிலே பெண்கள் அதிகாரம் பெறவேண்டுமாயின் அவர்கள் கட்சியின் முக்கிய பொறுப்புகளில் தங்களை தன்னிச்சையான ஆளுமையாக நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். ஒரு சில கட்சிகள் தவிர மற்ற எந்த கட்சிகளும் இதைத்தானாக முன்னெடுக்க மட்டாது. பெண்களை வாக்கு வங்கியாக மட்டுமே பயன்படுத்தும் கட்சிகளுக்கு எதிராக பெண் அமைப்புகளும் ஊடகங்களும் தொடர்ந்து பேச வேண்டும். ஊடகங்கள் எந்தெந்த சமூகத்திற்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை பேசுவதை விட்டு விட்டு பெண்சமூகத்திற்கு கொடுக்கப்படும் பிரதிநிதித்துவத்தை பற்றி தொடர்ந்து முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். பெண்களும் தங்களுக்கு நலத்திட்டங்களை அறிவிக்கும் கட்சிகளை விட தங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் கட்சிகளுக்காக வாக்களித்தால் பெண்களின் அரசியல் பிரதிநிதிகள் அதிகரிப்பது கண்டிப்பாக சாத்தியமாகும்.

******

ஹெலினா சிலுவை ஸ்டெபி.அ

முதலாம் ஆண்டு

பொருளறிவியல்துறை

1260820BD032

# உலகின் பார்வையில்.....

பாடுபட்டு உழைத்தவன் கையில்

புளியோதரை

பாசாங்கு காட்டி ஏமாற்றியவன் கையில்

பஞ்சாமிருதம்

சிறுதவறு செய்தவனுக்கோ

சிறுவர் ஜெயில்

பெருங்குற்றம் புரிந்தவனுக்கோ

முன் ஜாமின்

பசிக்காக உணவு கேட்பவன்

பிச்சைக்காரன்

பசியின்றி லஞ்சம் கேட்பவன்

பணக்காரன்

நாட்டுக்காக உழைத்தவன்

மண்ணுக்குள்ளே

தனக்காக உழைத்தவன்

பொன்னுக்குள்ளே

இந்த உலகமே

ஒரு மாயசாலை

அதில் வந்து போகும் நாம்

ஒரு பயணிகளே.…….

Aciya Priyarathinam R

I Year

Pedagogy of Mathematics

1260820BD002

## முள்ளில் ரோஜா



Nandhini .J

I Year

Pedagogy of Tamil

1260820BD052

# The Beauty of Music

